இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 346 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 11 – திங்கள்கிழமை 27 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 346 : Thiruvalluvar Year - 2057 - Aadi 11 - Monday 27 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## காவிரிப் பிரச்சினை: பேச்சுவார்த்தை என்கிற கர்நாடக அரசின் சதிவலையில் சிக்காமல் தனது முடிவை

# தமிழ்நாடு முதலமைச்சர் மறுபரிசீலனை செய்திட வேண்டும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 27-**

**“கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை என்கிற சதிவலையில் சிக்காமல் தமிழ்நாடு முதலமைச்சர் தனது முடிவை மறுபரிசீலனை செய்திட வேண்டும்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

இது குறித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருப்பதாவது:

காவிரி நீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட நாம் எடுத்த முயற்சிகளின் வரலாறு மிக நீண்டது. 1960-களில் தொடங்கி 1990 வரை பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும் எந்தத் தீர்வும் கிடைக்காததால்தான் அது கைவிடப்பட்டு, உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் ஆட்சிக் காலத்தில் காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அதன்பிறகும் தமிழ்நாட்டுக்கான தண்ணீரை வழங்குவதில் அநீதி இழைத்து வந்தது கர்நாடக மாநில அரசு.

### கர்நாடக அரசின் பேச்சுவார்த்தையை நிராகரித்த கழக அரசு!

கடந்த காலங்களில் காவிரி நீர் விவகாரத்தில் கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற யோசனை சொல்லப்பட்டபோதெல்லாம், அதனை உறுதியாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிராகரித்தது. ஏனென்றால், பேசுவது ஒன்றும் செய்வது ஒன்றுமாகவே கர்நாடக மாநில அரசு செயல்படும். உரிமையை நிலைநாட்டுவதாக இல்லாமல் பிரச்சினையை இழுப்பதாகவே அப்பேச்சுவார்த்தைகள் அமையும்.

அதிலும் குறிப்பாக, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது தமிழ்நாட்டின் உரிமையை முற்றிலுமாக நிராகரிப்பதாகும். எனவே, இதுகுறித்து கர்நாடக அரசுடன் எத்தகைய பேச்சுவார்த்தையும் நடத்துவதால் பயனில்லை என்பதே நமது நிலைப்பாடாகும்.

### தமிழ்நாட்டு மக்களுக்கு விரோதமான மேகதாது அணை!

மேகதாது குறித்து பேசுவதற்காக,



கர்நாடக முதல்வர் திரு. எடியூரப்பா அவர்கள் அழைப்பு விடுத்தபோது, முதலமைச்சராக இருந்த நான், “அந்தப் பேச்சுக்கே இடமில்லை” என மறுத்தேன். அப்போது நீர்வளத்துறை அமைச்சராக இருந்த அண்ணன் துரைமுருகன் அவர்களும், “பேச்சுவார்த்தைக்கே இடமில்லை” எனத் திட்டவட்டமாக அறிவித்தார். முற்றிலும் தமிழ்நாட்டுக்கும் மக்களுக்கும் உழவர் பெருமக்களுக்கும் விரோதமானது அந்தத் திட்டம். அதில் பேசுவதற்கு என்ன இருக்கிறது? என்பதே ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் எண்ணம்.

இந்நிலையில், கர்நாடகம் சென்று அம்மாநில முதலமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார் என வேளாண்துறை அமைச்சரே தெரிவித்திருப்பது விவசாயிகள் மத்தியில் பெருங்கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இது கர்நாடக அரசிடம், தமிழ்நாடு பணிந்து போகும் நிலையாகும்.

மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என்றும், அதற்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கிவிட்டது என்றும், யார் எதிர்த்தாலும் கட்டியே தீருவோம் என்றும் கர்நாடக மாநில அரசு வெளிப்படையாக, தொடர்ச்சியாகச் சொல்லும் போது, அவர்களிடம் பேசி என்ன ஆகப் போகிறது? அவர்களது பிடிவாதக் குணத்தை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறோமா?

### பேச்சு வார்த்தைக்குச் சென்றால் நமது 30 ஆண்டு சட்டப்போராட்டத்திற்கு சிதைவு!

காவிரி நீர் திறக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஏற்கனவே ஒரு “ஸ்கீம்” உருவாக்கப்பட்டு, எந்தெந்த மாதம் எவ்வளவு தண்ணீர் திறக்க வேண்டும் என்பதும் உச்சநீதிமன்றத்தால் இறுதி செய்து வெளியிடப்பட்டு விட்டது. அதைச் செயல்படுத்தக் காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழு ஆகியவை அமைக்கப்பட்டு விட்டன. இந்த நிலையில், பேச்சுவார்த்தைக்குச் செல்வது என்பது தமிழ்நாடு அரசின் 30 ஆண்டுகாலச் சட்டப் போராட்டத்தைச் சிதைப்பதாக அமைந்துவிடும். பேச்சுவார்த்தைக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடகம் செல்வது, தமிழ்நாட்டின் நிலையைக் குறைப்பதாகவும் அமைந்துவிடும்.

**ஏற்கெனவே உள்ள சட்டப்பூர்வ உரிமையைச் சிதைக்க “பேச்சுவார்த்தை” எனக் கர்நாடகம் தற்போது விரித்திருக்கும் சதிவலையில் வலியச் சென்று தமிழ்நாடு முதலமைச்சர் சிக்குவது ஏன்? தமிழ்நாட்டின் உரிமையைத் தாரை வார்க்கும் விதமாக முதலமைச்சர் செய்யும் இந்தச் செயலைப் பார்த்துக் காவிரி டெல்டா விவசாயிகள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.**

### த.வெ.க. அரசை ஆதரிக்கும் காங்கிரசின் கண்துடைப்பு நாடகமா?

கர்நாடக மாநிலத்தை ஆள்வது காங்கிரஸ் கட்சி அரசாகும். தமிழ்நாடு அரசிலும் காங்கிரஸ் கட்சி பங்கு வகிக்கிறது. எனவே கண்துடைப்புக்காக இது போன்ற பேச்சுவார்த்தை நாடகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்ற கேள்வியும் எழுகிறது. ‘நாங்கள் நேரிலேயே போய்ப்




பேச்சுவார்த்தை நடத்தினோமே’ என்று கணக்குக் காட்டுவதற்கு வேண்டுமானால் இது பயன்படலாமே தவிர, வேறு எந்தப் பயனும் ஏற்படப் போவது இல்லை.

காவிரி நீர் உரிமைப் பங்கீட்டுப் போராட்டம் நீண்ட நெடியது. தமிழ்நாட்டின் காவிரி உரிமை சட்டப்பூர்வமாக நிலைநாட்டப்பட்ட ஒன்று. காவிரி நீர் உரிமையின் ஆழ அகலங்களைப் புரிந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் தனது செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

### கர்நாடகாவின் செயல் நீதிமன்ற அவமதிப்பாகும்!

தமிழ்நாட்டிற்குக் காவிரி நீர் தரக் கர்நாடகம் மறுத்தால், அது நீதிமன்ற அவமதிப்பு; சட்ட மீறல்! மேகதாது அணை கட்ட முயற்சிப்பது உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பை மீறுவது. காவிரி போன்ற தமிழ்நாட்டின் தலையாய பிரச்சினைகளில் அனைத்துக் கட்சிகளின் ஆலோசனையையும் - விவசாயச் சங்கங்களின் கருத்துகளையும் பெற்ற பின்பே செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காவிரி உரிமை தொடர்பாகப் பேச்சுவார்த்தைக்குக் கர்நாடகம் செல்லும் தவறான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் கைவிட வேண்டும் என்று காவிரி டெல்டா விவசாயிகள் சார்பாகவும் - தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

**காவிரி போன்ற தமிழ்நாட்டின் தலையாய பிரச்சினைகளில்**
**அனைத்துக் கட்சிகள் - விவசாய சங்கங்களின் கருத்துகளைப் பெற்று செயல்படுக!**

---

## ‘நீட்’ முறைகேடு: இளைஞர்களின் போராட்டத்துக்குப் பணிந்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

# ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா!

## பிரதமருக்கு பதவி விலகல் கடிதத்தை அனுப்பினார்!

**புதுடெல்லி, ஜூலை 27 -**

**இளைஞர்களின் போராட்டத்துக்குப் பணிந்து ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.**

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 கோடி ரூபாய் நிவாரணம் அளித்தல், கடந்த 20ம் தேதி டெல்லியில் நடந்த ‘சலோ சன்சாத்’ பேரணியில் அமைதியாக பங்கேற்ற மாணவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யக்கூடாது மற்றும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் ஆகிய 3 முக்கிய கோரிக்கைகளை கரப் பான்பூச்சி ஜனதா கட்சி (சி.ஜே.பி.) வலியுறுத்தி வந்தது.

இதுதொடர்பாக, ஒன்றிய அமைச்சர்கள் ஜே.பி.நட்டா மற்றும் ஜிதேந்திர சிங் ஆகியோர் சி.ஜே.பி. தலைவர்கள் சவுரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா ஆகியோருடன் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் மாணவர்கள் மீதான வழக்கு ரத்து மற்றும் நிவாரணத் தொகை ஆகிய 2 கோரிக்கைகளுக்கு ஒன்றிய அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டது.

அதேசமயம், 26 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக், ஒன்றிய அரசின் உத்தரவாதத்தை ஏற்று போராட்டத்தை வாபஸ் பெற்றார்.

இந்நிலையில், நாடு முழுவதும் மாணவர்களின் போராட்டம் ஒரு பக்கம் நடைபெறும் நிலையில், அக்கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் அசுதோஷ் ரங்கா தனது ‘எக்ஸ்’ பக்கத்தில்,

‘ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும். அதில் எந்த சமரசமும் செய்ய முடியாது அதற்கு ஒன்றிய அரசு சம்மதிக்காவிட்டால், மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை’ என்று பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்தார். இளைஞர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பதவி விலகுவதாக பிரதான் அறிவித்துள்ளார்.

3.30 மணிக்கு பேச்சுவார்த்தை நடக்கவிருந்த நிலையில் பிரதான் ராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில்;

மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு மிகவும் வருத்தம் அளிக்கிறது. கடந்த 10 நாட்களாக நடந்த நிகழ்வுகள் எனக்கு தனிப்பட்ட அவமானமாக கருதவில்லை. முதல் நாளில் இருந்தே தவறுக்கான பொறுப்பை ஏற்று வந்துள்ளேன். போராட்டங்கள் தேச விரோத சக்திகளுக்கு ஆதரவாக மாறக்கூடாது. சட்ட நடவடிக்கைகளால் ஒரே ஒரு மாணவரின் எதிர்காலம் கூட பாதிக்கப்படக் கூடாது.

இளைஞர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பதவி விலகுகிறேன். எனக்கு தொடர்ந்து ஆதரவளித்த பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தர்மேந்திர பிரதானின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்ட குடியரசுத் தலைவர், உணவு மற்றும் பொது விநியோகம், நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சராக உள்ள பிரகலாத் ஜோஷியை கூடுதல் பொறுப்பாக கல்வித்துறை அமைச்சராக அறிவித்துள்ளார்.